சார்பு நீதிமன்றம், பல்லடம்.

OS.No. 54/2020

வாதி தரப்பு சாட்சி : PW2

பெயர் மற்றும் வயது : விஜயக்குமார்

தந்தை பெயர் : கண்ணன்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

1. நான் தற்போது 3/8 வெள்ளிங்காடு South Saves School எதிரில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்ற சம்மனின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதிகள் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சம்பூர்ணம் ஆகியோர் Time Process Mills என்ற நிறுவனம் நடத்தி வந்தார்கள். அதில் நான் 2004 ஆண்டு முதல் 2010 டிசம்பர் மாதம் வரை மேலாளராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கின் பிரதிவாதிகள் விஜயக்குமார் மற்றும் சுப்பிரமணி ஆகியோர் K.S Finance என்ற நிதி நிறுவனத்தை நடத்தி வந்தார்கள். மேற்படி பிரதிவாதிகள் தாராபுரம் சாலை, புதுார் பிரிவு, கதவு எண். 270A, என்ற முகவரியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் நடத்தி வந்தார்கள். 2009 மே மாதத்தில் எங்களது நிறுவனத்தின் முதலாளிகளான வாதிகளுக்கு நிறுவனத்தை நடத்துவதற்கு அவசர தேவை இருந்ததால் பிரதிவாதிகளிடம் கணபதிபளையம் கிராமம், கவுண்டம்பாளையத்தில் உள்ள வாதிகளுக்கு சொந்தமான காலியிடம் 63 செண்ட் நிலத்திற்கான அசல் ஆவணத்தை பொது அதிகார பத்திரம் பாதுகாப்பிற்கு எழுதிக்கொடுத்து 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து கடன் ரூ. 5 லட்சம் வாங்கினார்கள். அதற்கு வட்டியாக 3 ரூபாய் பேசிக்கொண்டார்கள்.
2. மேற்படி கடனுக்கு வட்டியாக மேலாளர் என்ற அடிப்படையில் வாதிகள் சார்பாக

நான் மாதம் மாதம் சென்று 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் ரூபாய் 15 ஆயிரம் வட்டி செலுத்தி வந்தேன். நான் மாதம் வட்டி கொடுக்கும்போது ரசீது கேட்டால் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். வாதிகளிடம் பேசி கொள்வதாக சொல்லிவிடுவார்கள். அதன் பிறகு 2010 டிசம்பர் மாதத்தில் நான் மேலாளர் பணியில் இருந்து நின்றுவிட்டேன். நான் மேலாளராக பணியாற்றிய வரை வாதிகள் சார்பாக அவர்கள் கொடுக்கும் வட்டி பணத்தை பிரதிவாதிகளிடம் செலுத்தி வந்தேன் அவ்வளவு தான். இந்த வழக்கு தொடர்பாக 2022ம் ஆண்டு ஒருவேலையாக சாலையில் சென்ற போது முன்னால் முதலாளியான 1ம் வாதி கிருஷ்ணமூர்த்தியை பார்த்த போது கடனுக்கு பாதுகாப்பிற்கு வாதிகள் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை தவறாக பயன்படுத்தி கிரையம் எழுதிக்கொண்டு தங்களை ஏமாற்றியதாக சொன்னார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரதுகையெழுத்து பெறப்பட்டது.

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.